கன்னியாகுமரி

ஸ்தல மகிமை

வெளியிடுவோர்:
வி. கோவிந்த ஐயர்,
வியாபாரம், கன்னியாகுமரி.

விலை அணு 3

இந் நாட்டின் எல்லையதை காத்து நின்று
எந் நாளும் மக்கள் நலம் பேண வேண்டி
பொன்னனத் தவக்கோலம் பூண்டுவிட்ட,
புண்ணியத் தாய் குமரி யருள் சுரந்து காப்பாள்!

குமரியம்பதியின் சிறப்பு.

அகில உலகிற்கும் அணியெனத் திகழும் நம் பாரத நாட்டின் தெற்கெல்லையாய் விளங்கும் இத்திரு நகர், கிழக்கே வங்காளக்குடாக் கடலாலும், தெற்கே இந்துமகா சமுத்திரத்தாலும், மேற்கே அரபிக்கடலாலும் சூழப்பட்டிருக்கிறது.

முற்காலத்தில் குமரி முதல் இமயம் வரையுள்ள இப் பரந்த நாட்டை *பரதன்* என்போன் ஆண்டுவந்தான். அவ்வரசனுக்கு எட்டுப் புதல்வர்களும், *குமரி* என்னும் ஓர் புதல்வியும் இருந்தாள். இம்மக்கள் ஒன்பது பேருக்கும் பரத கண்டத்தை ஒன்பது பாகங்களாகப் பிரித்து அரசாண்டு வரும்படி ஏற்பாடு செய்தான். அவற்றுள் தென்பாகத்தை குமரி என்பவள் அரசாண்டு வந்ததால் இந்நாட்டிற்கு '*குமரி நாடு*' என்றும், இத்தலத்திற்கு '*குமரியம்பதி*' என்றும் பெயர் வரலாயிற்று. சக்தியானவள் கன்னியாயிருந்து தவம் செய்வதால் இத்தலத்திற்கு *கன்னிமாகுமரி* என்று பெயர் வந்தது. முப்புறம் கடலால் சூழப்பட்டு மற்ருேர் புறம் தரையோடு இணைந்து கடலிலே நீண்டு ஒடுங்கிக் கிடப்பதால் பூமிநூல் விதிப்படி இதை குமரி முனை எனவும் அழைப்பர்.

கோவில் அமைப்பு

இத் திருநகரில் கன்னிநாயகி எழுந்தருளியிருக்கும் இவ்வாலயமானது பல நூற்றுண்டுகளுக்கு முன் *பரசுராமரால்* பிரதிஷ்டை செய்யப்பட்டு பின் இந்நகரை அரசாண்ட அரசர்களால் இக்கோவில் கட்டப்பட்டமைக்கு கோவிலிலுள்ள கல் வெட்டுகளே சான்ருகும்.

இத்தலத் தீர்த்த மகிமை

இத்தலத்திலுள்ள தீர்த்தங்களின் மகிமையை அறிந்த சாஸ்திரங்களை உணர்ந்த பெரியோர்கள் இவ்வண் வந்து இத் தீர்த்தங்களில் வேத விதிப்படி நீராடி பிதுர்களுக்குச் செய்ய வேண்டிய பிதுர் கர்மாதிகள் செய்து பின் பராசக்தியின் திருவருள் பெற்றதாக புராணங்கள் கூறுகின்றன. மக்களின் பாவங்களை நீக்கிப் புனிதமடைந்து சொர்க்கமடையச் செய்வது அனந்த புனிதமாகிய தீர்த்தங்களேயாகும். இவ்வித இயற்கைத் தீர்த்தங்களில் *காசியிலே கங்கையும், குமரியிலே கடலும்*, அதைச் சார்ந்த தீர்த்தங்களும் தலைசிறந்ததாகும். இதனுலேயே இந்துக்கள் *காசியிலே கங்கையாடி, கன்னியிலே கடலாடி* நலம் பெறலாம் எனக் கூறுகின்ருர்கள். தீர்த்தமாடுவோர் கோவிலின் சற்று வடக்கே அமைந்திருக்கும் *பாவவிநாசனம்* என்ற புஷ்காணியில் முதல் முதலில் நீராடி வருவது தொன்று தொட்டேயுள்ள வழக்கமாகும். இப் பாவவிநாசத் தீர்த்தமானது முன் தேவேந்திரனுக்கு கௌதம மகரிஷியின் பத்தினியான அகல்லிகையினுல் ஏற்பட்ட சாபத்தை நிவிர்த்தி பண்ணிய புண்ணிய தீர்த்தமென்று புராணங்கள் கூறுகின்றன. தேவேந்திரன் இத் தீர்த்தத்தில் நீராடி பராசக்தியைத் தொழுத உடன் அவரது யோனிக் கண்கள் மாறியதாக தெரியவருகிறது.

குமரி கோவில் உட்பிரகாரத்தில் உள்ள விநாயகரை தேவேந்திரன் பிரதிஷ்டை செய்து பூஜித்தமையாலேயே அவ் விநாயகருக்கு *இந்திரகாந்த விநாயகர்* என்று பெயர் வந்த

31-2

தாக வரலாறுகள் கூறுகின்றன. இவ்வரலாற்ருல் தேவேந்திரன் பாவநாச தீர்த்தத்தில் நீராடி பாவம் நீங்கினுன் என்பது தெளிவாய் விளங்குகிறது இப்பாவவிநாச தீர்த்தத்திற்கு மண்டூகத் தீர்த்தமென்று மற்ருேர் பெயருமுண்டு.

தேவியின் சந்நிதானத்திற்குக் கீழ் திசையில் வங்காளக் குடாக் கடலில் *சாவித்திரி*, *காயத்திரி*, *சரஸ்வதி*, *கன்னி விநாயகர்*, முதலிய தீர்த்தங்களும், தென் திசையில் இந்துமகா சமுத்திரத்தில் கட்டப்பட்டுள்ள ஸ்நானக் கட்டிடத்தில் குமரித்துறையின் கண் சிறப்புற்று விளங்கும் *மாதுர்*, *பிதிர்*, *பீமா* முதலிய புண்ணிய தீர்த்தங்களும், மேற்குத் திசையில் சற்று தூரத்திற்கு அப்பால் *தாணு தீர்த்தம்* என்று ஓர் தீர்த்தம் கடற்கரை ஓரத்தில் உள்ளது. சுசீந்திரத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ ஸ்தாணுமூர்த்திக்கு அபிஷேகம் செய்யப்படுகிற அபிஷேக நீர் இங்கு வந்து கடலோடு கலப்பதால் இதற்கு 'தாணு தீர்த்தம்' என்று பெயர் வந்ததாக பண்டுதொட்டே கூறப்பட்டுவருகின்றன.

இத் தீர்த்தங்களில் மக்கள் நியமன முறைப்படி தீர்த்தமாடிப் பின் தங்களுடைய மூதாதையர்களுக்குச் செய்ய வேண்டிய வைதிகக் கிரிகைகளை வசதியாய் நடத்துவதற்கு வேண்டி பதினாறு கால்களாலாகிய ஓர் அழகிய கல்மண்டபமும், அதன் பக்கத்தில் மக்கள் தங்கள் ஆடைகளை மாற்றுவதற்கு இரண்டு அறைகளுள்ள ஓர் கட்டிடமும் (dressing room) கட்டப்பட்டிருக்கிறது. இம் மண்டபத்தில்தான் மக்கள் தங்கள் மூதாதையர்களுக்குச் செய்யவேண்டிய வைதிகக் கருமங்களை தங்கள் தங்கள் வர்ணுசிரமத் தரும முறைப்படிச் செய்து, மக்கள் யாக்கையால் அடையவேண்டிய அறம், பொருள், இன்பம் என்ற மூன்றும் பெற்று, பின் பெறவேண்டிய வீடு பேற்றையும் அடைகிருர்கள்.

இத் தீர்த்தங்களில் வருஷம்தோறும் வரும் சித்திரை விஷு, சித்திரைப்பௌர்ணமி, வைகாசி விசாகம், உத்திராயன புண்ணியகாலம், ஆடி அமாவாசை, மகாலய அமாவாசை,

நவராத்திரி, தக்ஷுணயன புண்ணியகாலம், தை அமாவாசை, தைப் பூசம், சிவராத்திரி அமாவாசை, பங்குனி உத்திரம் முதலிய விசேஷ தினங்களில் எண்ணிறந்த மக்கள் கூட்டம் கூட்டமாய்க் கூடி, தீர்த்தமாடி, திருக்கோயில் வணங்கி தங்கள் இஷ்ட சித்தி அடைகிறார்கள். இத்தலத்திற்கு வருஷந்தோறும் வட இந்திய யாத்ரீகர்கள் வந்து தீர்த்தமாடி குமரி தரிசனம் செய்து வருகிறார்கள்.

சக்தியின் வரலாறு

இந்து சாஸ்திரத்துக்கு பிரதானமானது வேதம். வேதம், ருக்கு, யஜுர், சாமம், அதர்வணம் என நான்கு வகைப்படும். ரிக்கு வேதம் காசி மகாத்மியத்தைப்பற்றிக் கூறுகிறது. *யஜுர் வேதம் கன்னியாகுமரி மகாத்மியத்தைப்பற்றிக் கூறுகிறது.*

சோனிதபுரத்தைச் சேர்ந்த அசுர அரசனான கசிய பிரஜாபதியின் புத்திரர்களான வாணன், மூர்க்கன், சும்பன், மகிஷன் முதலிய அரக்கர்களில் வாணாசுரன் கடுந்தவம் செய்து பரமனிடம் அழியா வரம்பெற்றவன். (ஆனால் கன்னியினால் மரணமடையக்கூடாது என்ற வரம் பெறவில்லை) அவ்வரங்களின் மகிமையினால் அவன் தேவாதி தேவர்களுக்கும், முனிவர்களுக்கும், நரர்களுக்கும் துன்பம் செய்துவந்தான். அப்போது பூமியில் அசுரர்களால் துன்பம் அதிகப்பட்டு தருமம் மறைந்தது. அதர்மம் ஓங்கி, பெண்கள் கற்பு நெறி கெட்டு, சத்தியம், இரக்கம் இவை இரண்டும் ஒடுங்கி, ஆலயங்களில் பூஜைகள் குறைந்து, வர்ணாசிரம தர்மங்களும் கெட்டன. பூமிதேவியின் வலிமை இதனால் குறைந்ததால் பிரம்மனிடம் போய் முறையிட்டாள். பிரம்மன் தன்னால் அசுரனை சம்கரிக்க முடியாது என்றும், சங்கு சக்கிரதாரியான விஷ்ணுவினால்தான் முடியும் என்றும் சொல்லி திருப்பாற் கடலில் பள்ளிகொண்ட மஹாவிஷ்ணுவினிடம் சென்றார். அப்போது பூமிதேவியும் ஓர் பசு உருவம் எடுத்துக்கொண்டு பின் தொடர்ந்தாள். அதே சமயம் தேவர்களும் முனிவர்களும் ஒன்று சேர்ந்து வாணனின் துன்புறுத்தலை மஹாவிஷ்ணுவினிடம் முறையிட்டுக்கொண்டிருந்தார்கள்.

அதற்கு மஹாவிஷ்ணு "வாணனைக் கொல்லுவது சக்தியால் தான் முடியும், தேவர்களாகிய நீங்கள் பராசக்தியைக் குறித்து ஓர் யாகம் செய்யுங்கள், அந்த யாக அக்கினியில் உங்களது சக்தியை ஓம ஆகுதி செய்ய வேண்டும். அந்த ஓம குண்டத்திலிருந்து ஒரு ஜோதி பெண் உருவத்தில் வரும். அதன்மூலம் உங்களுக்கு நன்மை உண்டாகும்" என்றார். அன்றியும் ஓம குண்டத்திலிருந்து எழும் அத்தேவிக்கு *சிதக்கினி குண்டல சம்பூதா* என்ற பெயரிடும்படியும் கட்டளையிட்டார். தேவர்கள் அம்மாதிரியே யாகம் செய்தார்கள். அதிலிருந்து *பராசக்தி* உற்பத்தியானாள். பின் தேவியானவள் தென் சமுத்திரத்தின் கரையில் வந்து தவம் செய்யலானாள். அப்போது தேவிக்கு மணப்பருவம் வந்ததால் திருமணத்திற்கு வேண்டிய ஏற்பாடுகள் நடந்தன. இதையறிந்த பிரம்மபுத்திரரும் திருலோக சஞ்சாரியான *நாரதர்* தேவிக்கு கல்யாணம் ஆகிவிட்டால் அவளுடைய சக்தி குறைந்துவிடுமென்றும், வாணாசுர சம்காரம் நடைபெறாமல் போய்விடும் என்றும் எண்ணி கல்யாணத்தை நிறுத்திவிடக் கருதி தேவியிடம் வந்து "துஷ்டநிக்ரக சிஷ்டி பரிபாலன லோக மாதாவே! நீவிர் கல்யாண ஏற்பாடுகள் நடத்துவது சரியே; ஆனால் நீங்கள் அசுரர்களின் மாய சூட்சியில் அகப்பட்டுவிடாமல் நிறைவேற்ற வேண்டும். ஆதலால் உங்களை மணக்க வரும் பரமசிவனிடம் *கண்ணில்லா தேங்காய், கணுவில்லாக் கரும்பு, காம்பில்லா வெற்றிலை* இவைகளைப் பொழுது புலர்வதற்குள் கொண்டுவர வேண்டுமெனக் கட்டளை இடுங்கள். அக்கட்டளையை அவர் நிறைவேற்றுவதானால் திருக்கல்யாணம் நடக்கட்டும்" என்றார். உடனே தேவியும் அவ்வாறே கட்டளையிட்டார். சிவபிரான் கட்டளைப்படியுள்ள பொருட்களைக் கொண்டு வருவதை யறிந்த நாரதர் தான் ஒரு *சேவல்* உருவம் எடுத்து *சுசீந்தை*யிலிருந்து, குமரிமுனைக்கு வரும் வழியிலுள்ள *வழுக்காம்பாறை* என்னும் இடத்தில் நின்று *கோழி*யாக் கூவினார். கோழி கூவும் சப்தத்தைக் கேட்ட பரமன் விடிகோழி கூவிவிட்டது, இனிமேல் போனால் கல்யாணம் நடைபெறாதென நினைத்து அவர் *சுசீந்தையிலேயே* ஸ்தம்பித்து *தாணுமூர்த்தியாய்* நின்றுவிட்டார். கல்யாணமும் தடைபட்டுவிட்டது. கல்யாணத்திற்கென சேகரித்து வைத்த அரிசி பல

வகை மணலாய் மாறிவிட்டது. அப்பன்னிற மணல்களை நாம் இப்பொழுதும் கன்னிக் கடலருகே கண்கூடாகக் காண்கி ரேம். அன்றியும் கோவில் பிரகாரத்தில் ஒரு வார்ப்பு கல்லாய் மாறியிருப்பதையும் காணலாம்.

வாணுசுர சம்ஹாரம்

மூன்று உலகங்களையும் அடக்கி அரசாண்டுவந்த வாணுசுர னின் வேவுகாரர்களான துன்முகன், மூர்க்கன் என்பவர்கள் தென் திசையில் தேவி தவம் செய்வதைக் கண்டு வாணனிடம் தேவியின் அழகை வர்ணித்தார்கள். வாணனும் மோகாந்தகா ரத்தில் மூழ்கி தேவியினிடம் வந்து தன்னை மணக்க வேண்டி ஞன், அதற்கு தேவி யுத்தத்தில் வென்று கல்யாணம் செய்து கொள் என்ருள். உடனே இருவருக்கும் கடும் போர் நடந்தது. அப்போது வாணுசுரனுக்கு உதவியாக மூர்க்கனும் யுத்தத்திற்கு வந்தான். உடனே தேவியானவள் *பத்திரகாளியை* சிருஷ் டித்து மூர்க்கனுடன் யுத்தத்திற்கு அனுப்பிஞள். மூர்க்கன் பத் திரகாளியைத் தூக்கிச் சென்ருன். பத்திரகாளி அவனை *மூகாம் பிகை* என்னும் இடத்தில் வைத்து சம்ஹாரம் செய்தாள். அந்த இடத்தில் இன்றும் அடையாளமாக ஒர் சூலம் இருக் கிறது. பின் தேவியானவள் *வாணதீர்த்தம்* என்னும் இடத்தில் வைத்து மாயாவியான வாணுசுரனை சம்ஹாரம் செய்தாள். அப்போது தேவர்கள் புஷ்பமாரி பொழிந்தார்கள். வாணன் இறக்கும்தறுவாயில் "அண்ட பிண்ட சராசரங்களை ஈன்றெ டுத்த தாயே! என் அபசாரத்தைப் பொறுத்து எனக்கு நற்கதி யடைய அருள் புரிய வேண்டும். அன்றியும் நான் இறக்கும் இடத்தில் ஓர் புண்ணிய தீர்த்த கட்டம் உண்டுபண்ணி அதில் நீராடுபவர்களுக்கு கங்கை நீராடிய பலன் உண்டாகும்படி அருள்புரிய வேண்டுமென" பிரார்த்தித்தான். தேவியும் அவ் வாறே செய்வதாய் 'வாணதீர்த்தம்' (பாணதீர்த்தம்) என்னும் ஒர் தீர்த்த கட்டத்தை ஏற்படுத்தி அதில் வருடந்தோறும் ஆடி அமாவாசைக்கு வந்து ஸ்நானம்செய்து பிதுர் கர்மங்களை செய்ப வர்கள் கங்காஸ்நான பலனடைந்து நற்கதி அடைவார்கள்

என்று அருள் செய்தனள். தற்பொழுதும் ஆடி அமாவாசையின் போது ஏராளமான மக்கள் கூட்டம் கூட்டமாய் வந்து தீர்த்த மாடி செல்கின்றனர்.

அதன்பின் தேவியானவள் இங்கு வந்து கையில் ஜெபமாலை ஏந்தி தவம் செய்கிருள். பராசக்தியின் தோழியாகிய பத்திர காளியானவள் தேவியின் திருக்கோயிலுக்கு வடக்குப் பக்கத்தி லுள்ள அக்கிரகாரத்தின் மத்தியில் ஓர் கோயில் கொண்டு எழுந் தருளி இருக்கின்ருள். அதன் பக்கத்திலுள்ள தீர்த்தத்திற்கு *பத்திரகாளி தீர்த்தம்* என்று பெயர். தேவியின் கோயிலுக்குள் பூஜாவிதிக்கு வேண்டிய ஜலத்திற்காக சூலத்திஞல் பாறையைக் குத்தி அதிலிருந்து உற்பத்தியான நீரையே இன்றும் தேவியின் அபிஷேகத்திற்கும் தேவாலயத்தின் அவசியத்திற்கும் உபயோ கப்படுத்துகிருர்கள். இந்த நீரானது கங்கை தீர்த்தத்திற்கு ஒப்பானது. இத்தண்ணீர் எடுக்கப்படும் கேணியானது பாதாள சுரங்கப் படிக்கட்டுகளால் அமையப்பெற்று, அப்படிக்கட் டின் வழியாக புரோகிதர்கள் கீழே இறங்கி, தண்ணீர் எடுத்து வரும் அதிசயம் பார்க்கப் பார்க்க நமக்கு வியப்பைக் கொடுக் கிறது.

தேவாலய பூஜை சமயம்

1. நாள்தோறும் காலை 5 மணிக்கு காலை சந்தி பூஜை (தேவியின் விஸ்வருப தெரிசனம் நிர்மாலய தரிசனம்)
2. 8 மணிக்கு உதயமார்த்தாண்ட பூஜை.
3. 10 மணிக்கு மஹா அபிஷேகமும் அலங்காரமும்.
4. 11.30 மணிக்கு உச்சிகால மஹா பூஜையும் தீபாராதனையும்.
5. மாலையில் 5 மணிக்கு திருநடை திறக்கப்பட்டு 6 மணிக்கு சாயரட்சை தீபாராதனை. 6 மணி முதல் 8 மணிவரை அர்ச்சனை.

   8 மணிக்குமேல் அர்த்தஜாம நிவேத்தியமும் தீபாராதனை யும்.

அதன்பின் அர்ச்சனை விக்ரகத்தை (சிவிலி விக்ர கத்தை) சிவிலியில் வைத்து மூன்று பிரதட்சணம் மேள தாளத்துடன் வந்து பின் ஏகாந்த தீபாராதனையுடன் தினப்பூஜை முடிகிறது. (தேவியை தபசுக்கு அனுப்புதல்) இங்கு ஈஸ்வரன் இல்லாததால் பள்ளியறை தீபாராதனை கிடையாது.

கோவிலில் நாம் தேவிக்குச் செய்யக்கூடிய வழிபாடுகள்

1. திருமதுரம்
2. பொங்கல்
3. பாயசம் (சர்க்கரைப் பொங்கல்)
4. வடை அப்பம் (இரவு நேரத்தில்)
5. முழுக்காப்பு (சந்தணக்காப்பு)
6. அபிஷேகம்
7. கன்னியா போஜனம் முதலிய வழிபாடுகளில் நாம் செய்ய விரும்பும் வழிபாடுகளைப்பற்றி தேவஸ்தானம் ஆபீசில் சென்று விபரம் அறிந்து பணம் கொடுத்து நடத்தலாம்.

இவைகள் தவிர அஷ்டோத்திரம், திரிசதை, சகஸ்ரநாம அர்ச்சனை முதலிய அர்ச்சனைகளும் நடத்தலாம்,

இந்த தேவஸ் தானத்தின் கீழ் வேறு சில தேவாலயங்களும் உண்டு அவைகளாவன:—

1. கிராமத்திலுள்ள ஒரு சிவன் கோவில்.
2. கன்னியம்பலத்தில் விநாயகர் கோவில்.
3. கடற்கரையில் பரசுராமரால் பிரதிஷ்டை செய்யப்பட்ட பரசுராம பிள்ளையார் கோவில்
4. மகாதேவர் ஆலயம்.

5. வடக்கே சற்று தூரத்தில் காசி விஸ்வநாதராலயமும் அதன் பக்கத்தில் சக்கர தீர்த்த மென்ற ஓர்தீர்த்த கட்டமும் உண்டு. இத்தீர்த்தம் புராதீனமானதும், மிக முக்கியமானதுமாகும். வாணுசுரனை சம்ஹாரம் செய்த ஆயுதமாகிய சக்கரத்தைக் கழுவி சுத்தம் செய்ததால் இதற்கு சக்கர தீர்த்தமெனப் பெயர் வந்தது.

விழாக்கள்

புரட்டாசி மாதம் மகாளய அமாவாசையன்று 'நவராத்திரி' திருவிழா ஆரம்பித்து விஜயதசமியன்று முடிவடைகிறது. நவராத்திரி திருவிழாக் காலங்களில் தேவியின் விழா விக்கிரகத்தை இரவு 8 மணிக்கு மேல் நாள் தோறும் அலங்கரிக்கப் பட்ட வாகனத்தில் எழுந்தருளச் செய்து அந்தணர்கள் வாகனத்தை சுமந்து செல்வர்.

கோயிலுக்குள்ளிருக்கும் முதல் வெளிப்பிரகாரத்தில் வாத்திய கோஷங்கள் முழங்க, அந்தணர்கள் வேதபாராயணம் செய்ய வாகனம் மும்முறை வலம் வரும். அச்சமயத்தில் பாட்டுக் கச்சேரி முதலியவைகள் நடைபெறும். வாகனம் இறங்கியபின் அர்த்தசாம நிவேத்தியம் எடுக்கப்பட்டு தீபாராதனையும் சிவிலியும் நடைபெறும். சில விசேடச் சிறப்புக்களில் கொலுமண்டபத்தில் வைத்து பாட்டுக் கச்சேரியும், கதாப் பிரசங்கங்களும் நடைபெறும். நவராத்திரியின்போது பலர் வந்து பஜனம் (விரதம்) இருப்பார்கள். சரஸ்வதி பூஜையன்று கோவிலிலுள்ள எல்லா வெள்ளி வாகனங்களும் அபிஷேகம் செய்யப்பட்டு அலங்கார தீபாராதனைகள் நடைபெறும். மறுநாள் விஜயதசமியன்று காலையில் $3\frac{1}{2}$ மணிக்கே திருநடை திறக்கப்பட்டு $7\frac{1}{2}$ மணிக்குள் அபிஷேகம், உச்சிகால தீபாராதனைகள் முதலியவை நடத்திய பின் திருநடை அடைக்கப்படும். அதன் பின் அம்மன் தரிசனத்திற்கு வருபவர்கள் அன்று குதிரை வாகனத்தில் (வேட்டைக்காக) அலங்கரிக்கப்பட்ட விழா விக்கிரகத்தைத் தரிசித்துப் போவார்கள்.

அன்று பகல் 2 மணிக்கு மேல் மேளதாளத்துடன் அம்பாள் அம்பு போடுவதற்கு (வேட்டைக்கு) அதாவது வாணுசுரனை வதைப்பதற்கு புறப்பட்டு, நான்கு ரத வீதிகளையும் சுற்றி திருக் கண் சாற்றப்பட்டு, இங்கிருந்து 2 மைல் தூரத்திற்கு அப்பா லுள்ள 'மகாதானபுரம்' என்னும் கிராமத்திற்குப் பக்கத்தில் அலங்கரிக்கப்பட்டுள்ள மண்டபத்தில் எழுந்தருளி சுமார் 5 மணிக்கு அம்பு போடுதல் (வேட்டையாடுதல்) நடைபெறும். பின் அம்பாள் மகாதானபுரம் கிராமத்திற்கு எழுந்தருளி திருக் கண் முதலியவை சார்த்தப்பட்டு ரோட்டின் பக்கத்திலுள்ள 'காரியக்காரர் மடத்தில்' அலங்கரிக்கப்பட்டுள்ள பந்தலில் வந்து இறங்கி அங்கிருந்து குதிரை வாகனத்தை மாற்றி பூம் பல்லக்கில் புறப்பட்டு இரவு பத்து மணிக்குமேல் இங்கு வந்து கோவிலின் கிழ் வாசலிலுள்ள 'கன்னியா தீர்த்த' மண்டபத்தில் வைத்து வேத ஆகம முறைப்படி அம்பாளை கடலில் நீராட்டி, கிழ் வாசல் (கிழக்கு நடை) வழியாய் கோவிலுக்குள் கொண்டு போய் சேர்ப்பதுண்டு. இத்துடன் நவராத்திரி விழா முடிவடை கிறது. இந்த விழாவை பல்வேறு இடங்களிலிருந்தும் எண் ணிறந்த மக்கள் கூட்டம் கூட்டமாக வந்து கண்டு களிக்கின்ற னர். (அன்று மகாதானபுரம் கிராம சமுதாயக் கட்டிடத்தில் வைத்து கிராமத்தாரால் ஒரு கஞ்சி வார்த்தல் வைபவம் சிறப் பாக நடத்தப்பட்டு வருகிறது).

வைகாசி மாதம் புனர்பூச நட்சத்திரத்தில் தேவிக்கு வைகாசி விழாக் கொடி ஏறுகிறது. அவ்விழாவில் நாள்தோறும் தினம் காலையிலும், மாலையிலும், இரவிலும் அம்பாளை அலங் கரிக்கப்பட்டுள்ள வாகனங்கள் நான்கு ரத வீதிகளிலும் பவனி வரும். திருவிழாத் தினங்களில் மாலையில் கோவிலின் வடக்கே யுள்ள பெரிய கட்டிடமாகிய 'கன்னியம்பலத்தில்' வைத்து மத பிரசங்கங்களும், பாட்டுக்கச்சேரிகளும் நடை பெறும். 9-வது திருவிழாவென்று காலையில் ரதோற்சவம் நடைபெறும். மறுநாள் காலையில் கோவிலின் கிழ்வாசல் நடை திறக்கப்பட்டு அம்பாளை கடலில் நீராட்டு (ஆராட்டு) கோவிலில் சேர்ப்பார் கள். அன்றுதான் வைகாசி விசாகம். விசாகத்தன்று (10-ம் திருவிழாவன்று) இரவு தெப்பத் திருவிழா அதி விமரிசையாக

நடைபெறும். அன்று இரவு ஆராட்டுடன் வைகாசி விசாகத் திருவிழா முடிவடைகிறது.

கார்த்திகை மாதம் திருக்கார்த்திகையன்று இரவு அம்பாளை வாகனத்தில் அலங்கரித்து வாத்திய கோஷங்களுடன் நான்கு ரத வீதிகளின் வழியாய் பவனி வந்து, பின் கன்னியம்பலத்தின் அருகில் வைத்து 'சொக்கப்பனை தீபம்' நடைபெறும். பின் கோவிலின் கீழ்வாசலில் வைத்து ஆராட்டு நடைபெற்று, அன்று திறக்கப்படும் கீழ்வாசல் வழியாய் தேவியை கோவிலுக்குள் கொண்டு சேர்த்தலோடு கார்த்திகைத்தீபவிழா முடிவடைகிறது.

வருடத்தில் வைகாசி விசாகத் திருவிழா, நவராத்திரி பத்தாம் நாள், கார்திகை நாள் இம்மூன்று நாட்களிலுமே கீழ்வாசல் திறக்கப்படும்.

எல்லாத் தமிழ் மாத முதல் தேதிகளிலும், அமாவாசை, பௌர்ணமி முதலிய விசேஷ தினங்களிலும், கலைவாகனச் சிவிலியும் உண்டு. ஆடி மாதத்தில் பத்து தினங்கள் களபம் என்றோர் சிறுஉற்சவம் நடத்தப்படும். அப்போது தேவிக்கு தந்திரியால் சந்தனுபிஷேகம் நடைபெறும்.

அநேகர் தங்களுக்கு ஏற்பட்ட தேக உபாதைகள் நீங்க நீராடி நியாயப்படி பஜன விரதமிருந்து தேவியின் அருளால் தங்களது இஷ்டசித்தி அடைகிறார்கள்.

சுசீந்திரம்

சுசீந்திரம் என்னும் ஊர் கன்னியாகுமரியிலிருந்து நாகர்கோவிலுக்குச் செல்லும் வழியில் 8 மைல் தூரத்தில் இருக்கிறது. இங்கு ஒரு சிவாலயம் இருக்கிறது. இதற்கு 'ஞானவன க்ஷேத்திரம்' என்னும் வேறொரு பெயர் உண்டு. இங்கு திருமூர்த்திகளும் வந்து 'அனுசூயா தேவி'யின் கற்பு நிலையை சோதிக்க பிச்சை கேட்டார்கள். உடனே

பிச்சையிட ஆரம்பித்தாள். திருமூர்த்திகளும் நிர்வாணத்துடன் தந்தால்தான் பிச்சை எடுப்பதாகக் கூறினுர்கள். அனுசுயா தன் கற்பின் மகிமையால் மூவரையும் குழந்தைகளாக்கி தொட்டிலிலிட்டு தாலாட்டியதாக ஐதீகம். தேவேந்திரனுக்கு இவ்விடத்தில் வைத்தே மோக்ஷம் கிடைத்ததாகக் கூறப்படுகிறது. இக்கோவிலில் மூர்த்திகளாகிய பிரம்மா, விஷ்ணு, சிவன் முதலியவர்களுக்கு தனித்தனி இடம் அமைக்கப்பட்டிருக்கிறது இக்கோவிலில் தினமும் நடு இரவில் தேவேந்திரன் வந்து இரவு பூஜை செய்து வருவதாக புராணங்கள் கூறுகின்றன. இதற்கு தேவேந்திரபூஜை என்று சொல்வதுண்டு. இக்கோவிலின் பிரகாரத்தில் ஓர் பெரிய ஆஞ்சனேயர் விக்கிரகம் இருக்கிறது. இக்கோவிலில் மார்கழி மாதமும், சித்திரை மாதமும் பெரிய திருவிழாக்கள் நடைபெறும். மார்கழி திருவிழாவைத் தேர்த் திருவிழாவென்றும், சித்திரைத் திருவிழாவை தெப்பத் திருவிழாவென்றும் அழைப்பார்கள். இது புண்ணிய ஆலயங்களுள் ஒன்று. இங்கிருந்து நாகர்கோவிலுக்கு டவுண் சர்வீஸ் உண்டு. மின்சார விளக்குகள் போடப்பட்டிருக்கிறது.

இத்தல புராணத்தை பக்தியுடன் படிப்பவர்களும், கேட்பவர்களும், பிறருக்கு எடுத்துரைப்பவர்களும் சகல பாவங்களும் நீக்கப்பெற்றவராய் சன்மார்க்க நெறியை அடைவார்கள்.

பொது விஷயங்கள்

நம் இந்தியா தேசத்திலே வேறு எங்கும் காண முடியாத சில இயற்கைக் காட்சிகளை இங்கு காணலாம். அதாவது சூரிய உதயம், சூரிய அஸ்தமனம், காலையில் சூரியன் கிழக்கே வங்காளக்குடாக் கடலில் உதயமாவதும், மாலையில் மேற்கே அரபிக்கடலில் அஸ்தமிப்பதுமாகிய காட்சி பார்ப்பவர் மனதைப் பரவசப்படுத்தும்.

இது தவிர சித்திரா பௌர்ணமியன்று மாலையில் கிழக்கே சந்திரன் சமுத்திரத்தில் கொஞ்சம் கொஞ்சமாய் உதயமாவதும் மேற்கே சூரியன் கொஞ்சம் கொஞ்சமாய் மறைவதும், மறு நாள் காலையில் கிழக்கே சூரியன் உதயமாவதும், மேற்கில் சந்திரன் அஸ்தமிப்பதும் எண்ணிலடங்கா இயற்கைக் காட்சி யெனக் கண்டு களித்து ஆனந்திக்க ஏராளமான ஜனங்கள் வந்து போவார்கள். இக்கண்கூடா காட்சியானது இப்பூமண் டலத்தில் வேறு எங்கும் காணமுடியாது. இந்தக் கடற்கரை ஓரங்களில் சிவந்த மண்ணும், கருமண்ணும், வெள்ளையாய் அரிசிபோலுள்ள மணலும், சிப்பி, சோவி, சங்கு முதலியனவும் காணலாம். இவ்வூரின் பக்கத்தில் 4 மைல் தூரத்தில் மருத்துவா மலை (மருந்துவாழ்மலை) என்ற ஓர் மலை இருக்கிறது. அம்மலை யில் பல மூலிகைகள் இருக்கின்றன இம் மலையானது முன் ராம ராவண யுத்தத்தின்போது ஹனுமாரானவர் சஞ்சீவி மலையை எடுத்துக்கொண்டு போகும்போது அதில் ஒரு பாகம் சிதறி விழுந்ததாக ஓர் ஐதீகம். இம்மலையில் ஓர் கோவிலும் சுனையும் உள்ளது. இம்மலைக் காற்றானது பல ரோகங்களைப் போக்குவதாகவும் சொல்லப்பட்டு வருகிறது.

இவ்வூரில் கவர்மென்டாரால் கட்டப்பட்டு நடத்திவரும் ஓர் தர்ம சத்திரம் உள்ளது. இதில் யாத்திரை வாசிகள் மூன்று தினங்கள் வரை தாமசிக்கலாம், இங்கு சமையல் செய்வதற்கு வேண்டிய சௌகரியங்கள் இருக்கின்றன.

சர்க்காரால் நடத்தப்பட்டுவரும் 'கேப் ஹோட்டல்' 'ரெஸ்டு ஹவுஸ்' இருக்கிறது. அதில் தனவந்தர்கள் வந்து தாம சிப்பார்கள். அதற்கு வாடகை உண்டு. அதில் எல்லாவித வசதிகளும் உண்டு.

இங்கு சில வாடகைச் சத்திரங்களும், வாடகைக் கட்டி டங்களும் தாமசிப்பதற்குக் கிடைக்கும். மே, ஜூன், ஜூலை, மாதங்களில் சுகவாசத்திற்காக ஏராளமான ஜனங்கள் வந்து தாமசிப்பார்கள். தற்போது இங்கு கவர்மெண்டாரால் மின் சார விளக்குகள் போடப்பட்டிருக்கிறது. தற்போது தண்ணீர்

(பைப்) வசதியும் செய்திருக்கிறார்கள். இவ்வூருக்கு சுமார் 45 வருடங்களுக்கு முன் சுவாமி விவேகானந்தர் வந்திருந்து தேவி யின் அருள் பெற்று தேவியின் சன்னிதானத்திற்கெதிரே உள்ள ஸ்ரீ பாதபாறை என்ற பாறைக்கு சமுத்திரத்தில் தமது யோக சித்தியின் மூலம் நீச்சலில் அவ்விடம் போய் அன்ன ஆகார மில்லாமல் யோகம் செய்ததாகவும் சொல்லப்படுகிறது. இங்கு பொது மக்களின் ஆதரவிலும் கவர்மென்டு ஆதரவிலும் அன்னாரின் ஞாபகார்த்தமாக விவேகானந்தர் வாசகசாலை என்ற ஓர் நிலையம் நிறுவப்பட்டிருக்கிறது.

இவ்வூரில் கவர்மென்டாரால் நடத்தப்பட்டுவரும் ஓர் ஆஸ்பத்திரியும், ஓர் பப்ளிக் கால் டெலிபோன் ஆபீசும் தந்தி தபால் ஆபீஸும் உண்டு.

இங்கு மிஷன் ஆதரவில் நடத்தப்பட்டு வரும் ஓர் உயர் தரப் பாடசாலையும். மிஷன் சர்ச்சும், பெண்கள் படிப்பதற்கு ஓர் காண்வென்ட் பள்ளிக்கூடமும், இரண்டு பிறைமறிப் பாட சாலைகளும், தேவஸ்தான போர்டரால் நடத்தப்பட்டுவரும் தேவி குமரி இந்துமத பாடசாலையும் மகமதியர் பள்ளியும் இருக்கிறது.

இவ்வூரிலிருந்து நேரே திருநெல்வேலி பாபவிநாசம் முதலிய இடங்களுக்குப் பஸ் போக்குவரவு உண்டு. இங்கிருந்து நாகர்கோவில் மூலம் எல்லா இடங்களுக்கும் பஸ் போக்கு வரவு உண்டு.

சுபம்.

அசிசி அச்சகம், நாகர்கோவில்.